ஆனால் அனைத்து ஆசிரியர்களும் மீண்டும் தங்களுக்கு ஊக்க ஊதியம் கொடுக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள். அது பரிசீலனையில் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, பல்வேறு ஆசிரியர் சங்கங்களும் தங்களுக்கு மட்டும் தந்து வந்த ஊக்க ஊதிய உயர்வை, இந்தப் பொதுவான உத்தரவுக்குப் பிறகும் தொடர்ந்து தரவேண்டுமென்று கேட்டு வருகிறார்கள். ஆக அவர்களுடைய கோரிக்கைகளை அரசு பரிசிலனையில் எடுத்துக்கொள்ளும்.

மத்திய செகண்டரி கல்விக் கழகத்துடன் இணைந்த பள்ளிகள்

*54 வினா.—திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா (திரு. ம. சங்கரலிங்கம் சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மத்திய செகண்டரி கல்விக் கழகத்தின் (Central Board of Secondary Education) அனுமதியோடு, தமிழ் நாட்டில் நடைபெறும் உயர்நிலைப் பள்ளிகளைக் கண்காணிக்க, மாநில அரசு ஏற்பாடு ஏதேனும் செய்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

(உ) அப்பள்ளிகளில் நடைபெறும் தவறுகளை மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டு வரும் உத்தேசம் ஏதும் அரசின் பரிசிலனையில் உள்ளதா ?

(எ) ஆம் எனில், அது எந்நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

(உ) இல்லை.

(எ) இக்கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் இரா. சனார்த்தனம் : தலைவர் அவர்களே, செண்ட்ரல் போர்ட் ஆஃப் செகண்டரி எஜுகேஷன் நிர்வாகத்தின்கீழ் நடைபெறும் கல்வி நிறுவனங்களின் கல்விக் கொள்கைகளும் தமிழ் நாட்டில் உள்ள கல்விக் கொள்கைகளுக்கு இணையாக இருக்கின்றனவா ? அப்படி இணையாக இருக்க வேண்டுமென்று வலியுறுத்த நமக்கு வாய்ப்பிருக்கின்றதா ?

1984 மார்ச் 6]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, அவர்களுடைய கல்வித் திட்டத்திற்கும் நம்முடைய கல்வித் திட்டத்திற்கும் கொஞ்சம் வேறுபாடு இருக்கிறது. அதிலே குறிப்பாக அவர்கள் மும்மொழித் திட்டத்தை ஆதரித்து அந்த அடிப்படையிலே அவர்கள் செயல்பட்டு வருகின்றார்கள். பொதுவாக மத்திய அரசிலே வேலை செய்கின்றவர்கள் மாறுதல் பெற்று, பல்வேறு இடங்களுக்குச் செல்கின்றபோது, ஒரே மாதிரியாகக் கல்வி கிடைக்க வேண்டுமென்பதற்காக, பல்வேறு இடங்களிலே மத்திய அரசே பல்வேறு பள்ளிகளை நடத்திவருகின்றது. அதோடு, தனிப்பட்டவர்களும் அத்தகைய கல்வித் திட்டங்களை ஏற்றுக்கொண்டு அதுபோன்ற கல்வி நிறுவனங்களை நிறுவுகின்றார்கள். அவர்களுக்கு 'சென்ட்ரல் போர்ட் ஆஃப் எஜுகேஷன்' தந்திருக்கிறது. அப்படிப்பட்ட கல்விக் கழகங்களும் நடைபெற்று வருகின்றன.

திரு. ஆ. நல்லசிவன்: தலைவர் அவர்களே, கேள்விக்கு பதில் கூறும்போது, மத்திய செகண்டரி கல்விக் கழகத்தின் கல்விக் கூடங்கள் அனுமதியோடுதான் நடைபெறுகின்றன என்றும் அதற்கு ஓரளவு கண்காணிப்பு இல்லை என்ற மாதிரியும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதிலிருந்து அறிகிறேன். தமிழ் நாட்டில் அந்தப் பள்ளிகளிலே நிறைய மாணவர்கள் படிக்கின்றார்கள். அவர்களுக்கு அங்கு சரிவரச் சொல்லிக்கொடுக்கின்றார்களா என்று கண்காணிப்பதில் அரசுக்கு ஒரு பங்கு இருக்கவேண்டாமா? அப்படி கண்காணிக்க அதிகாரிகள் அதில் ஒரு பங்கு பெற நாம் ஏன் முயற்சி செய்யக் கூடாது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, அந்தப் பள்ளிகளைக் கண்காணிக்க வேண்டுமென்பது ஒப்புக்கொள்ளவேண்டிய ஒன்று. மத்திய செகண்டரி கல்விக்கழகத்தின் அதிகாரிகளை வைத்திருக்கின்றார்கள். அதை அவர்களே செய்து வருகின்றார்கள். ஆனால் மாநில அரசு அதை கண்காணிக்கின்ற அதிகாரம் இப்போது இல்லை.

செல்வி ஆ. லீலாவதி: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, அந்த ஆய்வாளர்கள் அங்கே கணக்கு வழக்குகளைப் பார்ப்பதற்காகத்தான் பொறுப் பேற்றிருக்கின்றார்கள். அந்தப் பள்ளிகளில் மாநில அரசு மற்ற நடவடிக்கைகளை எடுப்பதற்கு அந்தக் கல்விக் கழகத்தின் ஒப்புதலைப் பெற பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இந்தப் பள்ளிகளிலே ஏதேனும் தவறுகள் ஏற்பட்டால், அவற்றைத் திருத்துவதற்கான ஒரு நெறிமுறை வகுக்கப்பட்டு அதில் மாநில அரசுக்கும்

பங்கு இருக்க வேண்டுமென்ற அளவுக்கு பல்வேறு சந்தர்ப்பங்களிலே சொல்லிக் கொண்டு வருகிறேன். இப்போது நம்மிடம் புகார்கள் வந்தால், இங்கே இருக்கின்ற அதிகாரிகளை அனுப்புவதன் மூலம் அந்தப் பிரச்சினையை அவர்கள் பரிசிலிப்பதற்கு நடவடிக்கை நாம் எடுத்து வருகிறோம். நம்முடைய மாநில அரசு அதிகாரிகளையே அங்கு அதிகாரிகள் என்ற முறையிலே போட்டிருக்கின்றார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

புதிதாகத் தொடங்கப்பட்ட உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகள்

*55 **வினா.—டாக்டர் இரா. சனார்த்தனம் (திரு. க. மீனாட்சிசுந்தரம் மற்றும் திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் சார்பில்)** : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) 1981 ஆம் கல்வி ஆண்டின் தொடக்கத்தில் தமிழகத்தில் புதிதாகத் தொடங்கப்பட்ட அல்லது உயர்த்தப்பட்ட உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள் எத்தனை ?

(இ) பொதுமக்களால் விண்ணப்பிக்கப்பட்டு அனுமதி மறுக்கப்பட்ட பள்ளிகள் எத்தனை ?

(உ) அவை எவை, எவை? அவற்றிற்குரிய காரணங்கள் யாது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ), (இ) மற்றும் (உ) அவை முன் விவர அறிக்கை ஒன்று@ வைக்கப்பட்டுள்ளது.

டாக்டர் இரா. சனார்த்தனம் : தலைவர் அவர்களே, சென்ற கல்வி ஆண்டில் உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக பல பள்ளிகளுக்கு அனுமதி வழங்கியிருக்கிறார்கள். கல்லூரிப் படிப்பையும் சேர்த்திருக்கிறார்கள். வரும் கல்வி ஆண்டில் அதே அளவிலே மேல்நிலைப் பள்ளிகளுக்கு அனுமதி வழங்குகின்ற யோசனை அரசுக்குண்டா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே. பல்வேறு இடங்களில், மேல்நிலைப் பள்ளிகளை அனுமதிக்கவேண்டிய அளவுக்குத் தேவை இருப்பதை அரசு உணர்கின்றது. என்றாலும், இதுவரையிலும் அனுமதிக்கப்பட்ட பள்ளிகளில் போதுமான அளவுக்கு மாணவர்கள் இல்லை என்ற சூழ்நிலை சில பள்ளிகளிலே இருப்பது கவனத்திற்குக் கொண்டுவரப் பட்டிருக்கிறது. அந்த நிலைமைகளையெல்லாம் பரிசீலித்து, அதற்குப் பின்னர் நடவடிக்கை எடுக்கலாம் என்று அரசு நினைத்துக்கொண்டிருக்கிறது.

@ 202-210 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.